பாலர் கல்வி

ஒளி 1

மதி 12

JL

147642.

[பகுதி 12

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

1645

OFFICE OF THE RE...
8 - MAY 1937

தாதுஸ்ரீ பங்குனிமீ
APRIL 1937

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

41, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

ருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் விலை 0—4—0

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பாலர் வகுப்புப் பாஷைப் பாடமும் உபகரணங்களும் —எஸ். ஜெகன்னாதன் | 377 |
| 2. | பள்ளிக்கூட யாத்திரைகள் .... .... —R. கிருஷ்ண அய்யர் | 385 |
| 3. | சில ஆச்சரியக் குறிப்புகள் .... .... | 389 |
| 4. | குழந்தைகளின் கைவேலை .... .... —K. N. சாரி | 390 |
| 5. | பத்திராதிபர் குறிப்புகள் .... .... | 393 |
| 6. | இரக்ஷணைப் படம் .... .... ... | |



### கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. வுட்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்





# பாலர் கல்வி

தொகுதி 1] 1937 ஏப்ரல்மீ தாது௵ பங்குனிமீ [பகுதி 12


## பாலர் வகுப்புப் பாஷைப் பாடமும் உபகரணங்களும்

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், ஸைதாப்பேட்டை.

முந்தின இதழில் குழந்தைகள் எப்படி விளையாட்டு, பாட்டு, சம்பாஷணை, கதை, உலாவிவருதல் மூலமாக பாஷையைக்கற்றும் அபிவிருத்தி செய்தும் வருகிறார்கள் எனக் கவனித்தோம். விஷயங்களை வார்த்தைகளைப் பொருத்தமாகவும் அவ்வார்த்தைகள் மனதில் பதியும் விஷயத்தில் ஏற்படும் சில மனோபாவங்களை அறிதல் அவசியம். நாம் பலதடவை சொல்லும் வார்த்தைகள் அவர்கள் செவிக்கு எட்டுகின்றன. நம்மைப் பார்த்துப் பேச முயலுகின்றனர். ஒன்றைத் தானே பலதரம் சொல்லிப் பார்த்து நம்மைக் களிக்கச் செய்வதன்றி தாங்களும் களிக்கிறார்கள். மனதில் இவ்வாறு பதிந்த வார்த்தையை மறுபடி சமயம் வாய்த்தபொழுது திரும்பச் சொல்லுகிறார்கள். குடை எடுத்துக்கொண்டு தகப்பனுடன் கடைக்குப் போனபொழுது திரும்பி வரும் சமயத்தில் தகப்பனார் குடையை மறந்துவிட, குழந்தை குடை எங்கே காணோமே என்று தகப்பனாரை ஞாபகமூட்டிற்று. தந்தி, டெலிபோன் என்பவை நமது நரம்புகள் மூலமாகவும் மூளை மூலமாகவும் தேகத்திலேயே அமைக்கப்பட்டிருப்பது ஓர் ஆச்சரியமல்லவா?

### வாசிப்பு கற்றுக்கொடுக்கும் முறைகள்

உயிர் மெய் எழுத்து வரிசைக்கிரமம், உயிர் மெய் எழுத்துக்களை மாத்திரம் படமூலமாகக் கற்றுக்கொடுத்தல், மெய் யெழுத்துக்களையும் அகரமேறிய மெய் யெழுத்துக்களையும் படமூலமாக முதல் எழுத்தைக் கற்பித்தல், சுலபமாக விருக்கும் என்று ஆராய்ச்சி செய்யாமல் நினைத்து ஒரு எழுத்தை ஆதாரமாகவுள்ள வார்த்தையைக் கற்பித்தல், ஒரு எழுத்தைக் கற்றுக் கொடுத்துப் பிறகு அத்துடன் வேறு எழுத்து கலந்துவரக் கூடிய

147642
T15m21,N36PA
N36·1.12



சில [stamp obscured] கற்றுக்கொடுத்தல், கதைமூலமாகக் கற்றுக்கொடுத்தல் என்ற பல முறைகள் கையாளப்பட்டுவரப்படுகின்றன. ஒவ்வொரு முறையிலும் ஒருவித அனுகூலம் உண்டு. ஆயினும் இவைகளை சமயத்திற்குக் கேற்ற பிரகாரம் அனுஷ்டிப்பது ஏற்றதாகும். ஒவ்வொரு பாடத்திலும் பேச்சுப் பழக்கம், வாசிப்புப்பழக்கம் எழுத்துப்பழக்கம் இருக்கும்படி முறையை அமைத்துக் கொள்ளவேண்டும். விளையாட்டும் கொஞ்சம்கலந்து இருக்க வேண்டும்.

நம்முடைய தமிழ் பாஷையில் 247 எழுத்துக்கள் இருக்கின்றன. பல எழுத்துக்கள் தினசரி நடவடிக்கையில் உபயோகப்படுத்தப்படுகிறதில்லை. மற்றும் குழந்தைகள் பாஷையில் நான் கணக்கிட்டதிலிருந்து சுமார் 150 எழுத்துக்களே பலதரம் வருகின்றன. இவைகளையே முதலில் கற்றுக்கொடுப்பது அவசியம். ஒரு படத்தைக்காட்டி அதன் பெயரையோ அதன் முதல் எழுத்தையோ சொல்லிக் கொடுப்பதுடன் அந்தச் சொல்லில் உள்ள ஒல்வொரு எழுத்தின் உச்சரிப்பைச் சொல்லிக் கொடுப்பதும் அவசியமாகும். சாதாரணமாகக் குழந்தைகள் பலவார்த்தைகளின் முதல் எழுத்தைச் சொல்லிவிடுவார்கள். பேச்சுப்பழக்கத்தில் இதையும் ஒரு அப்பியாசமாக எடுத்துக்கொள்ளவேண்டும். பட்டு, கட்டு, லட்டு. என்ற வார்த்தைகளின் கீழ் தட்டி என்று ஒன்று சேர்க்க முதல் எழுத்தைப் பார்த்தும் இதுவரையில் சொல்லிவந்த "ட்டு" என்ற சப்தத்தைக்கொண்டும் தட்டு என்றே சொல்ல நேரிடுகிறது. இது ஒரு ஸஹஜமான தப்பிதமாகவே இருக்கிறது. ஆங்கிலத்திலும் இதுபெரும்பாலும் தெரியவருகிறது. said, side ; come, came ; on, no ; form, from ; palace, place ; said was ; how, who ; முழு வுருவத்தில் ஒரே மாதிரியாகக் காணப்படுவதினால் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து அறிந்து சொல்லப் பயிற்சி அவசியம். முதலில் முழுவார்த்தையை அறிவதும் பிறகு அவ்வெழுத்துக்களின் உச்சரிப்பை அறிவதும் அவசியமாகும். இப்படிச் செய்யின் மேலே கண்ட பிழைகள் மறைந்துவிடும். நமது தமிழ் பாஷையில் ஒவ்வொரு எழுத்திற்கும் நிச்சயமாக ஒரு உச்சரிப்பு உண்டு.. அதற்கு மாறுதலும் கிடையாது.

## ஆரம்பப் பாடங்கள்

பிள்ளைகளை வெளியில் அழைத்துக் கொண்டு அங்கு உள்ள மரங்களைப் பார்க்கச் சொல்லவும். அவர்களின் பெயரை வருவிக்கவும். வகுப்பு அறையில் வந்து அம்மாதிரி மரம் ஒன்று பட மூலமாக



எழுதிக் காட்டச்சொல்லவும். பிறகு } 'மரம் என்பதில் முதல் தொனி



என்னவென்று வருவிக்கவும். பிறகு ம ர ம் என்று சொல்லிக்கொடுத்து அவைகளை எழுதும் விதத்தை பிள்ளையோடு பிள்ளையாகநின்று ஆகாயத்தில் எழுதிக் காட்டவும். தாராளமாய் கையை நீட்டி எழுதவே ஆகாயத்தில் எழுதிக் காட்டிப் பழக்குவது நல்லது. அதையே கரும்பலகையில் எழுதவும். ஒரே துண்டில் மரம் என்று எழுதப்பட்ட துண்டை ஆளுக்கு ஒன்று கொடுத்துப் படிக்கச் சொல்லவும். ம ர ம் என்று மூன்று தனித் துண்டுகள் கொடுத்து மரம் என்று வைக்கச் சொல்லவும். "மரம்" இத் துண்டில் காணப்படும் எழுத்துக்களின் மீது எழுதினபிறகே சிலேட்டில் எழுதச் சொல்லவும்.

**அடுத்த பாடங்கள்** : கதை தீபாவளி வந்தது. அப்பா குழந்தைக்கு சட்டை வேஷ்டி, பாவாடை முதலியவை வாங்க கடைக்குப் போனார். குழந்தை ராதையையும் அழைத்துப்போனார். மழைவந்துவிடுமோ என்று கையில் குடையும் எடுத்துச் சென்றார். கடையில் சில மூட்டைகளை அவிழ்த்துப் பார்த்தார். பாவாடை, துண்டு, ரவிக்கை, புடவை, சரிகைத்துணி, பட்டுகுட்டை, எல்லாம் வாங்கினார். பிறகு கொஞ்சம் சர்க்கரை சீனிவெடி வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தார். எல்லாரும் இராத்திரி எழுந்து எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் பண்ணி, புது உடுப்பு உடுத்திக்கொண்டு, பக்ஷணம் தின்றுவிட்டு, சீனிவெடி சுட்டுக்கொண்டு சந்தோஷமாகப் இருந்தார்கள். காலையில் புகையும் குப்பையும்தான் இருந்தது.

**கேள்விகள்** : யார் கடைக்குச் சென்றது ?
யாரை அழைத்துக்கொண்டு போனார் ?
என்ன வாங்கப்போனார் ?
கையில் என்ன பிடித்துச்சென்றார் ?
அவர் வீட்டில் என்ன விசேஷம் ?
கடையில் என்ன சாமான் வாங்கினார் ?

**வார்த்தைகள்** :

| | | | |
|---|---|---|---|
| குழந்தை | கடை | புடவை | சர்க்கரை |
| ராதை | குடை | சரிகை | |
| தீபாவளி | மழை | ரவிக்கை | குப்பை |
| பண்டிகை | சட்டை | பாவாடை | புகை. |


**பாடத்தைத் திருப்புதல்** : கவளம் கவளமாக அன்னம் புசிக்கும்பொழுது "மத்யே மத்யே பானீயம்" என்று சொல்லுவதுண்டு. அதாவது நடுமத்தியில் கொஞ்சம் கலகலப்பாக விருக்கும்பொருட்டு கொஞ்சம் தீர்த்தம் சாப்பிடு என்று பொருள்படும். அம்மாதிரியே 4, 5 பாடம் கற்றுக்கொடுத்துவிடு

ப, பா. பி. பீ
ம, மா. மி. மீ
த, தா. தி. தீ

} என்று பழைய வழக்கப்படி கொஞ்சம் சொல்லிக் கொடுக்கவும்..

## பாடங்களுக்கேற்ற உபகரணங்கள்.

1. **பண்டங்களும் வார்த்தையும் :** கலியாண காலங்களில் சாமான் வைத்திருக்கும் பாத்திரங்களின் மீது சுண்ணும்பினுல் அவைகளினுள் இருக்கும் சாமான்களின் பெயரை எழுதி வைப்பதுண்டு. தோட்டங்களில் செடிகளின் பெயரை அவற்றின் அடியில் ஒரு சிறு பலகையில் எழுதி நட்டு வைப்பதுண்டு அதுபோலவே ஒரு பெயரைப் படித்ததும் அது என்ன சாமானை குறிக்கிறது என்று தெரியப் படுத்துகிறது. குழந்தைகளுக்கோ ஒரு சாமானைப் பார்த்ததும் பலகையில் எழுதப்பட்டுள்ள என்னது என்பதைத் தெரிவிக்கும்.






2. படமும் வார்த்தையும்: சுலபமாகப் படிக்கக்கூடிய சில வார்த்தைகளைக் காட்டும் படங்களை ஒட்டி அவற்றின் எதிரில் வார்த்தையை எழுதவும். படத்திற்குப் பதிலாக சிறு சிறு பொம்மைகளையும் உபயோகிக்கலாம்.

தேங்காய்
தாமரை
எலி
பசுமாடு



3. ஒரே எழுத்தில் முடியும் வார்த்தைகளும் ஒரே தொனியில் முடியும் வார்த்தைகளும்.




மற்றும் சில உதாரணங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| கத்து | பருப்பு | ஒன்று | நண்டு | குஞ்சு |
| குத்து | சிவப்பு | கன்று | குண்டு | பிஞ்சு |
| பத்து | உப்பு | மூன்று | கூண்டு | பஞ்சு. |






4. ஒரே எழுத்தில் ஆரம்பிக்கும் வார்த்தைகள்.

மற்றும் சில உதாரணங்கள்.


| | | |
|---|---|---|
| பூச்சி | வால் | தூள் |
| பூட்டு | வாய் | தூசி |
| பூசை | வாசல் | தூளி. |

ஒரே இனத்தைக் குறிக்கும் வார்த்தைகள்.

மற்றும் சில உதாரணங்கள்.

| | | | |
|---|---|---|---|
| கடலை | மா | — | மரப் பெட்டி |
| தோசை | மா | — | தகரப் பெட்டி |
| அரிசி | மா | — | இரும்புப் பெட்டி |


இம்மாதிரி நிரம்ப வார்த்தைகள் கிடைக்கும். இந்தப் பலகையின் உதவியைக்கொண்டு சிறு சிறு வாக்கியங்களையும் சொல்லிக் கொடுக்கக்கூடும்.




"தா" என்பதை மேலும் கீழும் நகர்த்தவும்.

பால் தா
வண்டி தா
மிட்டாய் தா
காப்பி தா } என்று முறையே தெரியவரும்

ஒரே இனத்தைச் சார்ந்த வார்த்தைப் பெட்டி.





இந்தப் பெட்டிக்குள் ரயில், குதிரை, மோட்டார், கட்டை, என்ற வார்த்தைகள் காணப்படும். "வண்டி" என்பதற்கு முன் இவற்றை வைக்க. ரயில் வண்டி, குதிரை வண்டி, மோட்டார் வண்டி, கட்டை வண்டி என்று முறையே தெரியவரும்.

இம்மாதிரி


கிழமை இலை
பருப்பு பழம்
நிறம் } என்ற இனங்களில் பல வார்த்தைகள் எழுதிக்கொள்ளலாம்.

7. குறில் நெடில் :




பல குழந்தைகள் இம் மாதிரி வார்த்தைகளை வாசிப்பதில் பெரும் பிழை செய்கிறார்கள். கவனித்து படிக்காத தப்பு ஒன்றும் வார்த்தை இன்னதென்று தெரியாமலிருப்பது மற்றொன்றுமாக இரண்டு தப்பிதங்கள் நேரிடுகின்றன. ஆகவே பட மூலமாகவே இவ் வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இதே மாதிரி மற்றும் சில வார்த்தைகளைப் பொறுக்கிக் கொள்ளலாம்.

8. லகர ளகர வித்தியாசங்கள் :




ய, ழ
ல, ழ, ள
ல, ள,
ழ, ள,
ர, ழ.

இவைகளை உச்சரிப்பது வெகு துர்லபமாயிருக்கிறது. உச்சரிப்பு மாற பொருளும் மாறி விடுகிறது. ஆகவே இங்கு காட்டியபடி ல, ள, வித்தியாசத்தைக் காட்ட மற்றும் சில உபகரணங்கள் தயார் செய்வது உசிதமானது. படங்கள் இன்றியமையாதவை.

| | | | |
|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ |
| உ | ஊ | எ | ஏ |
| ஐ | ஒ | ஓ | ஔ |
| ஃ | ஜ ஸ | ஷ க்ஷ ஹ | |

9. பாலர் : அச்சுக்கூடம் அ என்ற அறையில் க, ங, ச, ஞ என்ற எழுத்துக்களும் ஆ என்பதில் கா ஙா ஈா எழுத்துக்களும் இ என்பதில் கி, மி, கி, என்பவைகளும் முறையே உள்ளன. கோழி என்ற வார்த்தையை ஓ என்பதிலிருந்து கோ, இ என்பதிலிருந்து ழி யையும் எடுத்துவைக்க கோழி ஆகும். இம் மாதிரி பல வார்த்தையைப் பொறுக்கலாம்.

இங்குள்ள படங்கள் கலைமகள் ஆபீஸிலிருந்து அன்புடன் கொடுக்கப்பட்டன.




10. மனதில் படித்தபிரகாரம் செய்துகாட்டு.

| | | | |
|---|---|---|---|
| எழுந்திரு | தலை குனி | பலகை தா | மணி அடி. |
| இங்கே வா | கை நீட்டு | பலப்பம் எடு | புஸ்தகம் பிரி |
| வெளியே போ | கதவு சாத்து | மெள்ள வா | மரம் காட்டு. |

இம்மாதிரி சில துண்டுகளில் எழுதவும். ஒன்றைக் காட்டவும். குழந்தை அதை மனதிற் படித்து அதில் கேட்டிருக்கிற பிரகாரம் செய்து காட்டவேண்டும். அப்பொழுது பாடத்தை நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கிறான் என்று நாம் அறிந்துகொள்ளலாம்.

11. விளம்பரக் காகிதங்கள் :



இவைபோல் மற்றும் சில காகிதங்கள் செய்துகொள்ளலாம். லாங்மன்ஸ் கிண்டர் கார்டன் வாசக புஸ்தகம் கவனிக்க இவைகள் நன்கு விளங்கும். (லாங்மன்ஸ் க்ரீன் அண்டு கம்பெனி, மவுண்ட்ரோட் சென்னை : புஸ்தகம் ஒன்று ரூ. 0-3-6.

கோட்டு வலி உடனே நீங்கும்.
நல்ல மருந்து
இரண்டு புட்டி நாலணுதான்

12. பிள்ளைகள், ஊர்கள் இவைகளின் பெயர்கள்.

நான் எழுதுகிற பையன்மாத்திரம் எழுந்திருக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| ராமன் | நடராஜன் | பாலன் | கோவிந்தன். |
| ராஜம்மாள் | கமலாம்பாள் | கற்பகம் | மாரிமுத்து. |

13. நான் எழுதுகிற தெருவில் உள்ள பையன்மாத்திரம் எழுந்திரு.

| | | |
|---|---|---|
| கடைத் தெரு | குளக்கரைத் தெரு | பெருமாள் தெரு |
| செட்டித் தெரு | ராஜ வீதி | சன்னிதித் தெரு |

14. முதலில் மனப்பாடம் செய்த பாட்டுகளைப் படித்தல்.

டிங் டிங் என்று குத்தினாள்
மாவு இடித்தாள்
சல்லடையில் சலித்தாள்
வெல்லம் போட்டாள்
தேங்காய் போட்டாள்
நெய் குத்தினான்

எனக்குக் கொடுத்தாளே
உனக்குக் கொடுத்தாளோ?

"கலைமகள்" அச்சுக்கூடத்தார் வெளியிட்டுள்ள சித்திரப்படங்களும் உதவக்கூடியவைகளே (10 படங்கள் கொண்ட கவர் ரூ. 0-6-0)

### சில போதுக் குறிப்புகள்.

#### 1. உபகரணங்களின் அவசியம்.

படிப்பதில் ஓர் ஆசை உண்டுபண்ணுதல் அவசியம். எதைப் பார்க்கினும் அதைப் பார்க்கக் ஓர் அவாவரவேண்டும். ஜட்கா வண்டியில் நோட்டீஸ் கொடுத்துக்கொண்டு போகும்பொழுது சிறுவர் அத்துடன் பின் சென்று நோட்டீஸ் வாங்கி வருவார்கள். பெரிய எழுத்தில் உள்ளதையாவது படிக்கத் தெரிந்துகொள்ளுவது உற்சாகத்தைத் தரும். ரயில்வே ஸ்டேஷன்களின் பெயர், டிக்கட்டுகளில் உள்ள பெயர், தினசரிப் பத்திரிகையில் பெரிய எழுத்துக்களில் எழுதியுள்ள விளம்பரம் அல்லது தலை அங்கம் இவற்றைப் பார்க்கப் பள்ளிக்கூடத்திலேயே ஓர் வழி காட்டவேண்டும். உபகரணங்கள் செய்வதில் முக்கியமாக வேண்டுவது கொஞ்சம் அட்டைகள்தான். பிறகு கம்பி, பழைய சோப்புப் பெட்டி, பழுப்புக் காகித உரை, படங்கள், வர்ணப் பென்சில் இவைகள்தான். இவைகளைக்கொண்டு இங்கு காட்டியுள்ள அனைவற்றையும் அவைபோல் வேறு இவற்றையும் செய்துகொள்ளலாம். மெல்லிய பலகையில் செய்துகொள்ள முடியுமானால் சிலாக்கியமே. கையில் எடுத்துப் பழகி, விளையாட்டுக் கருவிபோல் விளையாடிப் படிக்கக்கூடியவைகள் இவைகள். இம்மாதிரி சாமக்கிரியைகள் பல இருப்பின் ஒவ்வொருவரும் ஒவ்வொன்று எடுத்துப் படிக்கமுடியும். பள்ளிக்கூடத்து அருகாமையிலுள்ள மரத்து நிழலில் இப்பாடங்களை நடத்துவது பொருத்தமாயிருக்கும். தற்காலத்தில் வாசிப்புக் கற்றுக்கொடுப்பதைப்பற்றியே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தேக்கம், வியர்த்தம் என்பவைக்கு வேறு காரணங்கள் இருப்பதுடன் படிப்பில் ஆசை உண்டுபண்ணுதல் என்பதும் ஒன்றாகும். இதற்கு நாம் பாத்தியப்பட்டவர்கள். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற பழமொழிப்படி ஐந்து வயதில் படிப்பை ஏற்றுக்கொள்ளாத 15,25 வயதுள்ள ஆடவர்கள் படிப்பது வெகு துர்லபமாயிருக்கிறது. அவர்களுக்கு வாசிப்புக் கற்றுக் கொடுக்க மிக்க பிரயாசை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆறு வயதுக் குழந்தையை என்னிடத்தில் ஒப்படைத்துவிடு என்ற ஆங்கில வசனம்போல் இளவயதில் படிப்பதற்கேற்ற ஆசையும் இயற்கை அமைப்பும் இருக்கிற காலத்திலேயே பாடத்தை சொல்லிக்கொடுப்பது அவசியமாகும். மேல் வகுப்பிற்குக் கூட இம்மாதிரி உபகரணங்கள் தொங்கவிடும் படங்கள் தேவை என்றே நினைக்கின்றேன்.

அடுத்த விஷயம்.

(**தனி முறையில் பாஷாவிருத்திக்கேற்ற உபகரணங்களும் அப்பியாசங்களும்**)

JL
TISM21, N3A1PA
N36.1.12
147642
சென்னை-600 003.

# பள்ளிக்கூட யாத்திரைகள்

R. கிருஷ்ண அய்யர்
தலைமை உபாத்தியாயர், முனிசிபல் பாடசாலை, ஆனந்தகிரி, கொடைக்கானல்

உபாத்தியாயர்களுக்கும், மாணாக்கர்களுக்கும் விடுமுறை நாட்கள் அவசியம் என்று நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவை எண்மையில் சரீரத்திற்கும், மனதிற்கும், ஓய்வையும், உல்லாசத்தையும் கொடுக்கக் கூடியனவாய் இருக்கின்றன. இவ்வித விடுமுறைக் காலங்களில் ஊருக்குச் சமீபத்திலுள்ள முக்கியமாய்ப் பார்க்கவேண்டிய இடங்களுக்கு மாணாக்கர்களைக் கூட்டிக்கொண்டு சிறு யாத்திரைகள் செய்ய நினைக்கவேண்டும். ஆனால் உபாத்தியாயர்களில் அநேகர் மேற்கண்டவாறு விடுமுறை நாட்களை அனுபவிக்க ஆசைப்படுகிறார்கள் இல்லை. தங்கள் வீடுகளில் இருந்துகொண்டே காலத்தைச் செலவழித்துவிடுகிறார்கள். பள்ளிக்கூட யாத்திரைகளின் மேன்மையைப்பற்றி அறிவாளர்கள் விசேஷமாகக் கூறியிருக்கின்றனர். சரியானபடி பிரயோகம் செய்வதன் மூலம் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூட யாத்திரைகள் உலகத்திலுள்ள எல்லா விஷயங்களையும், தெளிவாயும், உள்ளது உள்ளவாறேயும் சுய உருவத்துடனேயும் தெரிவிக்கின்றன.

இங்குக் கல்வி சம்மந்தமான யாத்திரைகளின் மேன்மையைப்பற்றி விவாதிப்பதில் யாதொரு அவசியமும் இல்லை. ஏனென்றால் அனுபவம் வாய்ந்த உபாத்தியாயர்கள் இதன் மேன்மை நன்கு அறிந்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் உபாத்தியாயர்களில் சிலர் தங்களுக்குச் சாதாரண பள்ளிக்கூட வேலையின் பாரம் அதிகமாய் இருப்பதாக நினைப்பதால் "பள்ளிக்கூட யாத்திரை" என்று ஒன்று இருப்பதாய்த் தெரியாத்தன்மையினாலும் தெரிந்திருந்து சிலர் உபயோகப்படுத்திக் கொள்ளாமல் இருப்பதாலும், பாட ஜாபிதாக்களிலும், கால அட்டவணைகளிலும், "பள்ளிக்கூட யாத்திரைகள்" என்ற விஷயத்திற்கு இடம் ஏற்படுத்தாமல் இருப்பதாலும் அநேகம் பாடசாலைகளில் இந்த விஷயம் முற்றிலும் இல்லாமல் போய்விடுகிறது. சிலர் பள்ளிக்கூட நேரங்களில் யாத்திரைகள் செய்துகொண்டிருந்தால் மற்ற பாடங்கள் கெட்டுப்போய்விடும் என்று நினைக்கிறார்கள். முதலில் நமக்கு அப்படித்தான் தெரியும். அதற்கு வருட ஆரம்பத்திலேயே பள்ளிக்கூட யாத்திரைகளுக்குப் பட்ஜட் போட்டுவிடவேண்டும். அப்படிச் செய்தால்தான் மற்ற பாடங்களுக்கு கெடுதல் நேராமல் இருக்கும். சரியான முறையில் யாத்திரைகள் நடத்தப்படும் பக்ஷத்தில் எல்லாப் பாடங்களுக்கும் அநேக விதங்களில் நன்மைகளைத் தருகின்றன. மேலும் இவ்வித யாத்திரைகள் உபாத்தியாயர்களும், மாணாக்கர்களும் ஒருவரை யொருவர் அறிந்துகொள்ளவதற்கான அபூர்வமான சந்தர்ப்பங்

களை அளிக்கின்றன. உபாத்தியாயர்கள் மாணாக்கர்களின் மத்தியில் எதிர்பாராததுமாயும், போற்றத் தகுந்ததுமான குணங்களைக் கண்டுகொள்ளுகிறார். மாணாக்கர்களும் உபாத்தியாயர்கள் மரியாதைக்குத் தகுதியுள்ளவர்கள் என்று தெரிந்து கொள்ளுகிறார்கள். இத்தியாதி காரணங்களால் பள்ளிக்கூட யாத்திரைகள் பள்ளிக்கூட நாட்களிலும் அவசியம் அனுசரிக்கப்பட வேண்டுமென்று தெரிகிறது.

பள்ளிக்கூட யாத்திரைகளைப் பலவகைகளாய்ப் பிரிக்கலாம். அவை பின் வருமாறு:—

(a) சிறு யாத்திரைகள்:—

1. காட்சி சாலைகளுக்குப் போதல்
2. துறைமுகங்களுக்குச் செல்லுதல்
3. திறந்த சமவெளிகளுக்குச் செல்லுதல்
4. பெரிய ஆலைகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள் இவைகளுக்குச் செல்லுதல்.

(b) நீண்ட யாத்திரைகள்:—

1. பூகோள சம்பந்தமாயும், சரித்திர சம்பந்தமாயுமுள்ள முக்கியமான பட்டணங்களுக்கும் நகரங்களுக்கும் செல்லுதல்.

2. செடிகளின் வகைகளைத் தெரிந்துகொள்ளுவதற்கும், பூகோள விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவதற்கும் அநேக மைல்கள் கால் நடையாய்ச் செல்லுதல்.

3. படகுகளில் மூலம் கால்வாய்களில் யாத்திரை செய்தல், ரயில் மோட்டார், கட்டைவண்டி இவைகள் மூலம் யாத்திரை செய்தல் முதலியனவாம்.

உதாரணமாய் நாம் மாணாக்கர்களைக் கூட்டிக்கொண்டு காட்சிச்சாலைக்குப் போகவேண்டுமானால் முதலில் எல்லாப் பிள்ளைகளுக்கும் காட்சி சாலையைப் பார்க்க ஆவல் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ளவேண்டும். பிள்ளைகளுக்கு அதிக உற்சாகத்தையும், விஷயங்களை நன்றாய்ப் பார்த்துத் தெரிந்துகொள்ளும்படியும் செய்யவேண்டும். பிள்ளைகளுக்கு ஏற்கனவே எதைப் பார்க்கவேண்டும், எங்கே பார்க்கவேண்டும், எப்படிப் பரீக்ஷை செய்து பார்க்கவேண்டும், பார்த்த பிறகு என்ன செய்யவேண்டும் என்பவைகளைக் கற்பித்திருக்கவேண்டும். ஒவ்வொரு மாணாக்கனையும் குறிப்பிட்ட விஷயங்களில் ஈடுபடச் செய்து ஒவ்வொருவரையும் கேள்விகள் விவரிப்பு, சித்திரங்கள் முதலியவைகளால் பரீக்ஷைசெய்யவேண்டும். உபாத்தியாயர்களும் அவசியமான இடங்களில் அபூர்வமான விஷயங்களை எடுத்து வைக்கவேண்டும். யாத்திரைகள் **"போகவேண்டியது சிற்றுண்டிகளைத் தின்று விட்டு வரவேண்டியது"** என்பதே கூடாது. முக்கியமான நோக்கத்துடன் தான் யாத்திரைகள் செய்யவேண்டும். அதிகமான பிள்ளைகளும்



கூடாது. அதிகமான பிள்ளைகள் இருந்தால் அநேக பிரிவுகளாய்ப் பிரித்து அநேக உபாத்தியாயர்களின் மேல்பார்வையில் யாத்திரைகள் செய்யப்படவேண்டும். யாத்திரைகள் செய்வதற்கு முன் தகுந்த ஏற்பாடுகளை எல்லாம் செய்துகொள்ளவேண்டும். ஒவ்வொரு பிள்ளையிடத்திலும் யாத்திரைக்கு வேண்டிய பாக்கெட் நோட்டுப்புத்தகம், ஒருகாகிதப் பென்சல், ஒரு பேனாகத்தி, மாதிரி சாமான்கள் கொண்டுவர தகரப்பெட்டி, சீசா முதலிய சாமான்கள் அவசியம் வேண்டும், பிள்ளைகளைக் குன்றுகள், பள்ளத்தாக்குகள், செடிகள், இயற்கை யமைப்புக்கள் முதலியவைகளைப்போல் சித்திரங்கள் வரையச் செய்யலாம்.

இவ்விதம் யாத்திரைகள் செய்வதானது பார்க்கும் சக்தியையும், விஸ்தரிக்கும் சக்தியையும் அதிகரிக்கிறது. எல்லாப் பாடங்களிலும் பிள்ளைகளுக்கு ஆசையை உண்டாக்கிப் பிள்ளைகள் தாங்களே தெரிந்துகொள்ளுமாறு சாதனங்களை ஏற்படுத்துகின்றன. பிள்ளைகள், தாராளமாய் ஓடி யாடிப் புஷ்பங்களையும், இலைகளையும் சேகரிப்பதற்கு அனுகூலமாய் இருக்கின்றன. இயற்கை யமைப்பின் அழகையும் கடவுளின் சக்தியையும் கண்டு ஆச்சரியப்படும்படி செய்கிறது. யாத்திரைகள் என்றாலே பிள்ளைகளுக்குச் சந்தோஷம் தான். மிருகாசயத்திற்குச் சென்றால் அபூர்வமான உயிருள்ள பிராணிகளைக் காண்கிறார்கள். சரித்திர சம்மந்தமான இடங்களுக்குச் சென்றால் அவைகளை நேரில் பார்த்தவுடன் பழையகாலச் சண்டை சச்சரவுகளைக் காண்பதுபோல் தெரிகிறது. உதாரணமாய்ப் பானிப்பட்டைப் பார்த்தால் அக்பரைப்பற்றியும், டாஜ்மகால், ஜம்மா மஜ்ஜீட் இவைகளைப் பார்த்தால் நமது தேசமானது முற்காலத்தில் எவ்விதம் இருந்ததென்பதையும் இப்பொழுது எவ்விதம் இருக்கிற தென்பதையும் நினைக்கும்படியாய்ச் செய்கிறது.

மேலும் இவ்விதமான யாத்திரைகள் மாணாக்கர்களிடத்தில் பல நல்ல குணங்களை அபிவிருத்தி செய்கின்றன. அவையாவன:—

1. **கடவுள் பக்தி:**—பெரிய யாத்திரைகள் ஆரம்பமாகும் காலங்களில் கடவுளை வழிபடல், ஒவ்வொரு நாளும் எல்லோரும் சேர்ந்து கடவுளைத் தியானித்தல், பல ஊர்களுக்குப்போய் அவ்விடமுள்ள கோவில்களுக்கும், சர்ச்சுகளுக்கும், மசூதிகளுக்கும் போய் ஒவ்வொருவரும் மூல விக்கிரகங்களையும், சிலைகளையும் தரிசித்தல், சித்திரவேலைகளையும், கல் செதுக்கு வேலைகளையும் கண்டு ஆனந்தித்தல், பஜனைகள் செய்தல் முதலியவைகளால் கடவுள் பக்தி ஏற்படுகிறது.

2. **நாகரிக குணம்:**—பல ஊர்கள் சென்று பல ஜனங்களைப் பார்ப்பதாலும், பழகுவதாலும், ஒரேவிதமான உடைகள் தரித்துக்கொள்ளல், வரிசையாய் நடந்துசெல்லல், சந்தடி செய்யாமலும், பிறருக்கு அசௌகரியமில்லாமலும் போதல், தலைவருக்குக் கீழ்ப்படிதல், ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளல், ஒருவரும் கூட்டத்தைவிட்டுத் தவறி


விடாமல் பார்த்துக்கொள்ளல், ஸ்நாநம் செய்யும் இடங்களில் அபாயம் நேரிடாவண்ணம் பார்த்துக்கொள்ளல் முதலியவைகளால் நாகரிககுணம் ஏற்படுகிறது.

3. ஒற்றுமையான வாழ்க்கை:—ஒருவரை யொருவர் அறிந்து கொள்ள சந்தர்ப்பங்கள் அநேகம் இருப்பதால் உபாத்தியாயர்கள் பெற்றோர்களைப்போல் கவனிப்பதைக் கண்டு பிள்ளைகளிடம் சுபாவமாகவே குருபக்தி ஏற்பட்டு விடுகிறது. பிள்ளைகளுக்கும் ஒருவருக்கொருவர் கவனித்துக் கொள்ளவேண்டுமென்றும், எல்லாரும் யாதொரு வித்தியாசமுமின்றிச் சேர்ந்து வாழவேண்டுமென்ற அபூர்வமான குணம் ஏற்படுகிறது.


அநேக இடங்களில் பலபள்ளிக்கூடங்களுக்குச் சென்று மாணவர்களுடன் பழகுவதால் அவர்கள் யாவரும் தங்கள் சகோதரர்களே என்று நினைக்கும்படியான குணமும் ஏற்படுகிறது. குன்று ஏறுதல், காடுகளில் செல்லுதல் முதலியவை வீரத்தையும், தைரியத்தையும், விடாமுயற்சியையும் விருத்தி செய்கிறது. எல்லாவற்றிலும் முக்கியமாய் ஜாதிமத வித்தியாசங்களை முற்றிலும் போக்கி எல்லோரையும் ஆப்த நண்பர்களாய்ச் செய்து விடுகிறது.

ஆகையால் உபாத்தியாயர்களாகிய நாம் எல்லோரும் நமது மாணாக்கர்களை யெல்லாம் யாத்திரைகள் அடிக்கடி செய்யும்படி செய்து மேற்கண்ட நல்ல குணங்களை அனுபவத்திலேயே படியும்படி செய்யவோமேயானால் தற்சமயம் நமது இந்தியா தேசமானது பல மதங்களின் வித்தியாசம் பல ஜாதிகளின் வித்தியாசம் பணக்காரர்கள் ஏழைகள் என்ற வித்தியாசம் மேல்ஜாதி, கீழ்ஜாதி என்ற வித்தியாசம் முதலிய எல்லாக் கொடுமைகளாலும் அடங்கி யிருப்பதால் தேசமக்களாகிய நாம் ஒற்றுமையில்லாமல் கஷ்டப்படுகிறோமாதலால் நமக்குப் பின் மேற்கண்ட நல்ல குணங்களில் நம்மால் பழக்கப்பட்ட மாணாக்கர்களாகிய தேசமக்கள் அடங்கிய நமது இந்தியா தேசமானது ஒற்றுமையிலும், சகோதரத்வத்திலும், க்ஷேமத்திலும் சுதந்திரத்திலும் உலகத்திலேயே சீரும் சிறப்பும் வாய்ந்த நாடாக விளங்கும் என நம்புகிறேன்.

## சில ஆச்சர்ய குறிப்புகள்




ந்திரனைவிட பூமிக்கு இழுக்கும் க்தி அதிகம். ஆகவே பூமியு ள்ள ஒரு பொருள், சந்திர காளத்தில் இருந்தால் மிக இலே ாய்விடும்.



ஆஸ்திரேலியா, தென் அமிரிக்கா பிரதேசங்களில் வசிக்கும் ஒருவித மீன். இது கோடை காலங்களில், ஒரு வளையில் சென்று உறங்கும்.



ஆர்க்கிமிடீஸ் என்னும் பௌதீக சாஸ்திரி, ஒரு நீண்ட நெம்புக்கோலும், பூமிக்கு வெளியே நிற்க ஒரு இடமும் கொடுத்தால் பூமியை நெம்பி தூக்க முடியும் என்று சொன்னார், இது முடியுமா? பூமி, நிமிஷத்திற்கு பல ஆயிரம் மைல் வீதம் சுழல்வதால் அப்படிப் பூமியைத் தூக்க முயல்கிறவன், பூமியின் வேகத்துடன் ஓடவேண்டும், இது முடியுமா?




டெட்சீ, என்னும் கடல் நீர் மிகவும் கனமுள்ளது. மனிதர்கள் இதில் மூழ்க முடியாது.

# குழந்தைகள் கை வேலை


## 3. மைத்தெறிப்புப் படங்கள்.

குழந்தைகளே, இந்தத் தடவை மைத்தெறிப்புப் படங்கள் செய்யும் விதத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். அதற்கு வேண்டிய சாமான்கள் மசி, பல் விளக்கும் பழைய தூரிகை ஒன்று, ஒரு பேனாக்கத்தி, கொஞ்சம் காகிதம்.

1. முதலில் 4, 5 இலைகளுள்ள ஒரு கிளையை எடுத்துக்கொள் அதை இரண்டு மை உறிஞ்சும் தாள்களுக்கு மத்தியில் வை. அதன்மீது பாரமுள்ள ஒரு சாமானைத் தூக்கி வை. இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்த இலைகளை அப்படியே கொத்தாக எடு. அவை இப்பொழுது தட்டையாக மடிப்புகள் இல்லாமலும் இருக்கும். இவைகளே நமது வேலைக்கு ஏற்றவை. (படம் 6, 7 பார்க்கவும்.)





1





2

2. பிறகு இரண்டு தடிப்புக் காகிதங்கள் ஒவ்வொன்று 8"+6" உள்ளதாக எடுத்துக்கொள். படம் உல் காட்டியதுபோல் ஒரு காகிதத்தில் ஒரு கோழிமுட்டை வடிவம்போல் வெட்டிக்கொள். உன்னிஷ்டப்படி வட்டம் சதுரம், நீண்ட சதுர வடிவமும் வெட்டிக்கொள்ளலாம். படம் 2 ஐ படம் 1 ன் மீது வைக்க படம் 3 ஆ மாதிரி காணப்படும். அம்மாதிரி நீ அட்டைகளை வைத்துக்கொள். உன்னிடமுள்ள உலர்ந்த



6



7

கொத்து இலையை நன்றாகப் பிரிந்த பிரகாரமே கோழிமுட்டை வடிவத்தில் படிய வைத்துக்கொள். தேவையானால் இவை நகராத ஊசி கொண்டு கெட்டியாகப் பதியவைத்துக்கொள். பல் துலக்கும் தூரிகையில் கொஞ்சம் மை ஊற்றிக்கொள். கத்தியில் சீவும் பாகத்தின் பின் பக்கத்தினால் தூரிகை மயிரை அழுத்து. அப்படி அழுத்தும்பொழுது தூரிகையை உன்னிடமே இழுத்துக்கொள். அப்பொழுது மை இலைமீதும் E F G H காகிதத்தின்மீதும் தெறிக்கும். A B C D காகிதத்தின்மீது மை தெரிக்காது. முன் சொன்னதுபோலக் கோழிமுட்டை வடிவம் முழுதும், இலைகள் முழுதும் மை தெறிக்கும்படி செய். இது சற்றுநேரம் காயட்டும். பிறகு கோழிமுட்டை வடிவத்தையும் இலைகளையும் தனியாகப் பிரித்து எடு. இப்பொழுது படம் 4 காட்டியதுபோல் மைத் தெறிப்புப் படங்கள் பார்ப்பாய். இலைகளிருந்த பாகம் மாத்திரம் வெண்மையாகத் தெரியும்.

3. வேறு ஒருமாதிரியாகக் கூட இந்த வேலையைச் செய்து கொள்ளமுடியும். ஒரு மனிதன் அல்லது மிருகத்தின் உருவத்தை எழுது அல்லது எழுதப்பட்ட உருவத்தை வைத்து அதேபோல் ஓர் பிரதி எடுத்துக்கொள். சுற்றுக்கோடு மாத்திரம் போதும். உருவம் வெட்டப்பட்டவுடன் அந்த இடம் பொந்தாக இருக்கும். அதுவும் தத்தலித்த மனிதன் அல்லது மிருகம்போலக் காணும். இதையே வேறு ஒரு காகிதத்தின்மீது வைத்து முன்போல மசி தெறி, படம் 5ல் காட்டப்பட்டதுபோல் அந்த இடம் முழுதும் மை தெரிந்து இருக்கும். இந்தப் படத்தைச் சுற்றிலும் ஒரு வட்டம், கோழிமுட்டை வடிவம், சதுரம் ஏதேனும் ஒன்று வரைந்துகொள். இந்த வேலைக்கு எந்த வர்ணமுள்ள மசியையேனும் உபயோகித்துக்கொள்ளலாம். அழகாகச் செய்யப்பட்ட வேலை அழகாகத்தானிருக்கும். ஆகவே அதற்குக் கண்ணாடிகூடப் போட்டு மாட்டி வைத்துக்கொள்ளலாம்.

படத்திற்கு எப்படிச் சட்டம் போடுவது என்பதை அடுத்தமாதம் தெரிந்துகொள்ளலாம்.

(All Rights Reserved) K. N. சாரி

# பத்திராதிபர் குறிப்புகள்

ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் நிலை.

வேலூர் முனிசிபல் பாடசாலைகள் நடந்துவரும் திட்டத்தைப் பற்றி, கல்வி இலாகா தலைவரின் மேல்அறிக்கையில் அநேக முனிசிபல் பள்ளிக்கூடங்கள் மாட்டுக்கொட்டகையில் இருப்பது வருந்தத்தக்கது என்று கூறியுள்ளதாக சில நாட்களுக்கு முன்பு சென்னை மெட்ராஸ் மெயில் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது, தவிர அவ்வறிக்கையில் வேலூரிலுள்ள சில முனிசிபல் பள்ளிக்கூடங்களில் போதனாமுறைக்கு வேண்டிய உபகரணங்களே யில்லை யென்றும், கரும்பலகை கூட சில பள்ளிக்கூடங்களில் இல்லாதது மிகவும் வருந்தத்தக்கது என்றும் கூறியுள்ளார். பள்ளிக்கூடங்கள் இவ்வாரு கேவலமான நிலையிலிருக்குமானால் எவ்வாறு பெற்றோர்கள் பள்ளிக்கூடங்களுக்கு தங்களது அரும் குழந்தைகளை அனுப்ப மனம் துணிவார்கள்? மாட்டுக்கொட்டகைகளில் பிள்ளைகளை அனுப்புவதை விட, வயல்களில் வேலை செய்வதற்காக பிள்ளைகளை அனுப்புவதில் அவர்கள் தேக ஆரோக்யம் பெருவதுமன்றி, தங்கள் வாழ் நாட்களுக்கு வேண்டிய உபயோகமுள்ள பொது அறிவும் பெர முடியும். உபகரணங்கள் அற்ற பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் காலம் கழிப்பது வீணே. ஆகவே வேஸ்டேஜ் இருக்கிறதென்றால் அதில் ஆச்சரியப்படுவானேன்? அதிகாரிகள் செலவழிக்கும் பணம் வீண் செலவாவது அல்லாமல், கட்டாயப்படிப் சட்ட விதிகத்தின்படி பாலர்களை வீணாக தங்களது இளம் வயதை மாட்டுக்கொட்டைகளில், ஒருவித கல்வியும் பெற முடியாமல் 4, அல்லது 5 வருஷங்கள் வைத்திருப்பது அவர்கள் வாழ்நாட்கள் பூராவும் வீணாக்குவதல்லவா? இந்த வேஸ்டேஜ்க்கு யார் உத்திரவாதம்? ஆகவே, கட்டாயக் கல்வி திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் அதிகாரிகள், பாலர்கள் கூடும் பள்ளிக்கூடங்களில் ஆரோக்ய வசதிகள் ஏற்படுத்தவேண்டியது அவசியமாகும். போதனாமுறைக்கு வேண்டிய உபகரணங்களெல்லாம் கொடுப்பது அதிகாரிகளின் பொருப்பேயாகும். முனிசிபல் அதிகாரிகளும் துரைத்தனத்தார்களும், இது விஷயம் மிகவும் கவனம் செலுத்தவேண்டியது அவசியம். வேலூர் முனிசிபல் பள்ளிக்கூடங்கள் போலவேதான் இவ்விராஜதானியில் அநேக ஆரம்ப பாடசாலைகள் இருக்கின்றன. முனிசிபல் பாடசாலை

களே இந்நிலையிலிருந்தால் உதவி பெறும் பாடசாலைகளின் நிலையையும் கேட்கவேண்டுமா?

## பாலர் கல்வி.

இத்துடன், பாலர் கல்வியின் முதல் தொகுதி முடிவாகி, ஈஸ்வர ஞூ சித்திரை மாதத்தில் இரண்டாம் தொகுதி ஆரம்பிக்கிறோம் இந்த வருஷம், பாலர் கல்வி நடந்து வர உதவி புரிந்த நமது சந்தாதார்களுக்கும், கட்டுறை யெழுதிய நேயர்களுக்கும் எமது மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகிறோம்.

பாலர் கல்வி ஆரம்பக் கல்வி அபிவிர்த்தியின் பொருட்டே ஆரம்பிக்கப்பட்டது என்பது நமது நேயர்களுக்குத் தெரிந்ததே. ஆயினும் இவ்வருஷத்தில் ஆர ப ஆசிரியர்களிடமிருந்து, பாலர் கல்விக்குப் போதுமான உதவியேற்படவில்லை என்பது வருந்தத்தக்கதே. துரைத்தனத்தாரை, பாலர் கல்வி என்னும் மாதாந்தரப் பத்திரிகை தென் இந்தியா ஆசிரியச் சங்கத்தாரால் பிரசுரிக்கப்படுகிறதென்றும் அது ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு உபயோகமானது என்றும் ஆரம்பக் கல்வி அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும் மென்று கேட்டுக் கொண்டதற்கு அம்மாதிரி ஒன்றும் செய்ய முடியாது என்று கல்வி இலாகா தலைவர் பதிலளித்து விட்டது மிகவும் வருந்தத்தக்கதே. ஆகவே, ஆசிரியா தாம் நம்து பாலர் கல்விக்கு உதவி புறிய வேண்டும்.

ஒவ்வொரு சந்தாதாரரும், பாலர் கல்வியைப் பற்றி தங்களது நேயர்களுக்குச் சொல்லி, 3 அல்லது 4 சந்தாதார்கள் சேர்க்க முயல வேண்டும். பாலர் கல்வியை ஆசிரியர்கள் அல்லாதவர்களும் உபயோகிக்கலாம். பெற்றோர்கள் பாலர் கல்வியில் தங்கள் பாலர்களுக்கு போதிக்க வேண்டிய உபகரணங்களும் முறையும் தெரிந்துக்கொள்ளமுடியும். தவிர சிறுவர்களும் பாலர் கல்வியைப்படித்து ஆநந்திப்பார்கள். ஆகவே ஆசிரியர்கள் சற்று முயற்ச்சி எடுத்துக்கொண்டு கிராமத்திலுள்ள பெரியோர்களையும் சந்தாதார் ஆக சேற்கவேண்டும்.

இதுதவிர ஆசிரியர்கள் மற்றொரு விஷயத்தில் பாலர்கல்விக்கு உதவி புரியக்கூடும். தங்கள் பள்ளிக்கூட விஷயங்களை சுருக்கமாக எழுதி அனுப்பியும் போதனுமுறை விஷயமாக சிறு கட்டுறைகள் எழுதி அனுப்பியும், பாலர் கல்விதான் மேற்கொண்ட தொண்டை இயற்றிவைக்கலாம். இவ்வாறு ஆசிரியர்கள் உதவிபுரிவார்கள் என்று நம்புகிறோம்.



'The South Indian Teacher' மேற்கொண்ட கொள்கைபோல் ஆசிரியர்கள் தங்கள் சொந்தமுயற்சியாலேதான் முன்னுக்கு வரவேண்டும். பிறர் உதவியை நாடுவதில் பயனில்லை. ஆகவே பாலர்கல்வி, ஆரம்ப ஆசிரியர்கள் பத்திரிகையாதலால் ஆரம்ப ஆசிரியர்களே அதை வளர்க்க வேண்டுவது அவசியமாகும்.

## 28-வது மாகாண கல்வி மகாநாடு.

28-வது சென்னை மாகாண கல்வி மகாநாடு, தஞ்சையில் மேமீ 6, 7, 8 தேதிகளில்கூடும். ஸ்ரீமான் சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தலைமைவஹிக்க அன்புடன் அங்கீகரித்துள்ளார். மகாநாட்டில் ஆலோசனைசெய்யும் விஷயங்கள் முக்கியமானதில் ஆரம்பாசிரியர்களின் கஷ்டங்களும், ஆரம்பக் கல்வியின்பொருட்டு செய்யவேண்டிய சீர்திருத் தங்களும் ஒன்று. இவைகளைப் பற்றி South Indian Theacher, மார்ச்சு இதழில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அதின் தமிழ் மொழி பெயர்ப்பு அடுத்த இதழில்வரும். ஆரம்பாசிரியர்கள் அனைவரும் மகா நாட்டுக்குவந்து மகாநாட்டை சிறப்பிப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கப் படுகிறது. மகாநாட்டின் முழுவிபரமும் வரவேர்ப்புக் கமிட்டி காரியதரிசிக்கு எழுதி தெரிந்துக்கொள்ளலாம்.

தென் இந்திய ரயில்வே கம்பெனியார், ஆசிரியர்களுக்கென்று மேமாதத்தில் Go as you Please டிக்கட்டுகள் கொடுக்கப்படும் என்று விளம்பரம் செய்துள்ளது மிகவும் பாராட்டத்தக்கதே. ஆசிரியர்கள் இப் பேருதவியைப் பாராட்டி, மகாநாட்டிற்கு விஜயம் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

147642
சென்னை-600 008.
JL
T5m21, N36PA
1136.1.12


# Trade Printing


OF Quality that builds up your reputation and brings better results for your clients. Our up-to-date facilities, and the experience gained from helping the Trade for over quarter of a century, ensure an exceptional service at a really reasonable price. PUT us to the test with your next JOB.

WRITE TO US OR 'PHONE


PHONE
2846

**THE LIBERTY PRESS**
7, SUNKURAMA CHETTY ST.
:: G.T., MADRAS ::


## இரக்ஷணைப் படம்—11



சைகிலில் இருவர் ஏறி சவாரிசெய்வது
மான பழக்கம். வேகமாக திரும்பும் பொழுது இரு
கீழே விழ நேரிடும்.




மைத்தெறிக்கும் படம்

(389-ம் பக்கம் பார்க்க)

*Wanted publishers to purchase the following manuscripts written by C. S. Ramaswamy Iyer, Retired Teacher and author of Child's History of India, Heroines of Ind, etc.*

| | | |
|---|---|---|
| English Conversation Book I | | for Class IV |
| do. do. Book II | | do V |
| Arithmetic for Beginners ... | ... | in Tamil |
| Domestic Hygiene ... | ... | in Tamil |
| Stories from Indian History ... | ... | for Class V |
| Tamil Primer for Beginners ... | ... | ... ... |

For terms, please write for outright purchase of the Copyright of the above

to The Editor of this Magazine or to:

C. S. RAMASWAMY IYER (*Retired Teacher*)
**2/12-A, Alangatha Pillai Street : : Triplicane, Madras.**

A GUIDE TO

ELEMENTARY SCHOOL TEACHERS

By **Mrs. R. S. SWARNAMBAL,** M.A., L.T.

with a foreword by **D. S. REDDI,** M.A, (*Oxon.*)

**English Edn.] 178-pp. with 45 Illustrations [Price Re. 1**

This guide gives exhaustive practical suggestions and hints which will help teachers to draw up time-tables and syllabuses, and impart instruction on satisfactory useful lines and thus improve the general efficiency of all Elementary Schools of the Presidency. (*Descriptive illustrated Booklet free*)

**G. SRINIVASACHARI & SONS,**
EDUCATIONAL PUBLISHERS,
**Narasingapuram Street —— Mount Road, Madras.**

*N.B.*—**Tamil Edition—in the Press**

Regd. No. M. 3473


# தென் இந்திய ஆசிரியர்

# ஐக்கிய காப்பு நிதி

## ஆசிரியர்களுடையதே

## பின் காலத்திற்கு ஒரு மூலதனம்

ஆசிரியர்களுக்குள் —

— ஐக்கியமும் பெருகும்

எட்டு வருஷங்களுக்கு முன் தென் இந்திய

ஆசிரியர் சங்க ஐக்கிய காப்பு நிதி

ஸ்தாபிக்கப்பட்டு

செழித் தோங்கி வளர்ந்து வருகிறது.

உடனே சேருங்கள்

— மற்ற விவரங்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதலாம். —

41, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதருஸ்.

M. K. Ramamurti,
கௌரவ காரியதரிசி.


Printed at the Liberty Press, G.T., Madras & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Singarachari St., Triplicane, Madras.